திருக்கோவில் பிரதேச சபை

அம்பாறை மாவட்டம்

---------------------------------------

1. நிதிக்கூற்றுகள்

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மே 26 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 24 இல் சபையின் தவிசாளருற்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

இந்த அறிக்கையில் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து திருக்கோவில் பிரதேச சபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுகளின் மீதானகருத்துரைகள்

1.3.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுடன் இணங்குதல்

2013 ஒக்டோபர் 02 ஆம் திகதிய 03/2013 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் 2011 ஆம் ஆண்டு தெடக்கம் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் முதல் நான்கு நியமங்களைப் பின்பற்றி நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படவேண்டிய போதிலும் அதற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காகச் செலுத்தவேண்டிய ரூபா 11,500 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக கணக்குகளில் ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மின்சாரக் கட்டணம், நீர் கட்டணம் மற்றும் தொலைபேசிக் கட்டணம் என்பவற்றிற்கு மீளாய்வாண்டிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 25,500 கூட்டு மொத்த தொகைக்கு கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் நிலையான வைப்புக்கள் மீது பெறப்பட்ட வட்டி ரூபா 47,500 தொகை கணக்குக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டில் யுநெப்ஸ் (UNOPS) நிறுவனத்திடமிருந்து அன்பளிப்பாக பெறப்பட்ட வாகனத்தின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

1.3.3 பெறப்படவேண்டியவைகள், மற்றும் செலுத்தவேண்டியவைகள்

2011 ஆம் ஆண்டில் அலுவலகத்தில் இருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற மூன்று உத்தியோகத்தினரதும், 2004 ஆம் ஆண்டு மரணமடைந்த ஒரு உத்தியோகத்தரதும் கடன் நிலுவை ரூபா 115,337 தொகையை உரிய நிறுவனங்களிடமிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு 2014 யூன் 09 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

1.3.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்கி ஒழுகாத சந்தர்ப்பங்கள் கீழேதரப்பட்டுள்ளன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டம் பிரிவு 158 | சேகரிப்பாளருக்கு அல்லது அலுவலருக்கு ஆதனவரி செலுத்தப்படாததற்கு செயலாளரினால் ஒப்பமிடப்பட்ட எழுத்தாணையொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1988ம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகளின் அத்தியாயம் I இன் பிரிவு 5(XII) | காசு மற்றும் களஞ்சியப் பொருட்கள் நிர்வாகரீதியாக ஒப்படைக்கப்பட்ட இரு உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்பு பெற்றுக்கொள்ளப்படவில்லை. |
| (இ) இலங்கை சோசலிச குடியரசின் நிதி ஒழுங்குவிதி | |
| (i) நி.பி 396 (b) | வழங்கப்பட்டு ஆறு மாதங்களுக்கு மேலாக மாற்றப்படாத ரூபா. 558,414 கூட்டு மொத்த தொகையான 22 காசோலைகள் தொடர்பாக உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) நி.பி 571(2)

ரூபா 272,690 தொகையான காலங்கடந்த வைப்புகளை உரிய நபர்களுக்கு செலுத்துவதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றம் செய்வதற்கு 2014 யூன் 09 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதிமீளாய்வு

---------------------

### 2.1 நிதிவிளைவுகள்

---------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார்கூற்றுக்களின்படி 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானத்திலும் கூடிய மீண்டுவரும் செலவினம் ரூபா 1,532,256 ஆகும். இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான வருமானத்திலும் கூடிய மீண்டு வரும் செலவினம் ரூபா 2,938,017 ஆக இருந்தமை நிதிவிளைவுகளில் ரூபா 1,405,761 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

### 2.2 வருமான முகாமைத்துவம்

------------------------------------------

#### 2.2.1 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டன.

(அ) 2013 திசெம்பர் 31 வரைகிடைக்க வேண்டிய ரூபா 843,950 தொகையான நீதிமன்ற தண்டப்பணத்தினை கிழக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படவில்லை.

(ஆ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய முத்திரைக் கட்டணத் தெகையை பதிவாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்படவில்லை.

#### 2.2.2 ஏனைய வருமானம்

-----------------------------

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டன.

(அ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவிற்கமைய சபையினால் வருமானங்களை அறவிடுவதற்காக உபவிதிகளை சட்டமாக்கத் தவறியதன் காரணமாக சபையின் அதிகாரத்திற்குட்பட்ட இடங்களில் தனியார் நிறுவனங்களினால் தங்களின் விற்பனைப் பொருட்களை விளம்பரப்படுத்துவதற்காக நிறுவிய 09 விளம்பரப் பதாதைகளுக்காகவும் தொலைத்தொடர்பு நிறுவனங்களால் நிறுவப்பட்ட 07 தொலைத் தொடர்பு கோபுரங்களுக்காகவும் மீளாய்வாண்டிற்காக அறவிடவேண்டிய அண்ணளவான ரூபா 125,000 தொகையான வருமானத்தை சபை இழக்கவேண்டிஏற்பட்டது.

(ஆ) 1982 முதல் 2012 ஆம் ஆண்டுவரையான காலத்திற்கு நிலுவையாகக் காணப்பட்டு இன்று வரை அறவிடப்படாதுள்ள ரூபா 637,386 தொகையான இறைச்சிக் கடைக் குத்தகைப் பணத்தை அறவிடுவதற்கு அல்லது ஏடுகளிலிருந்து பதிவழிப்பதறகு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நான்கு வருடங்களுக்கு மேலாக நிலுவையாகவுள்ள கடை வாடகைப் பணமாகிய ரூபா 718,995 தொகையை அறவிடுவதற்கு மீளாய்வாண்டின் இறுதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3. செயற்பாட்டுமீளாய்வு

3.1 முகாமைத்துவ பலவீனம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) 2008 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 ஆம் ஆண்டு இறுதி வரை ஒப்பந்தக்காரரிடமிருந்து அறவிடப்பட்ட பெறுமதிசேர் வரி ரூபா.66,644 தொகையை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைப்பதற்கு கணக்காய்வுத் திகதியான 2014 யூன் 09 வரைநடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) தம்பிலுவில் பொது நூலகத்தினால் வாசகர்களுக்கு இரவல் வழங்கிய ரூபா 7,227 பெறுமதியான 37 புத்தகங்களை அவர்களிடமிருந்து மீளப்பெற்றுக் கொள்வதற்கு மூன்று வருடகாலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 பயன்படுத்தப்படாதசொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) தேங்காயெண்ணெய் தயாரிக்கும் இயந்திரம் பயன்படுத்தாமை

சபையினால் 2008 ஆம் ஆண்டு ரூபா 95,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட தேங்காயெண்ணெய் தயாரிக்கும் இயந்திரம் உரிய நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது 2014 யூன் 09 ஆந் திகதி வரை களஞ்சியத்தில் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

(ஆ) பேப்பர் மீள் சுழற்சி இயந்திரம் பயன்படுத்தாமை

சபையினால் 2008 ஆம் ஆண்டு ரூபா 1,314,100 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட பேப்பர் மீள் சுழற்சி இயந்திரமானது உரிய நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படாது 2014 யூன் 09 ஆந் திகதி வரை களஞ்சியத்தில் உள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது.

4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 உள்ளகக் கணக்காய்வு

ஒவ்வொரு உள்ளூராட்சி மன்றத்திலும் தமது ஆற்றலுக்கு எற்றவாறு உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்றை உருவாக்கி கொள்ள வேண்டுமென மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் 2005 நவம்பர் 08 ஆம் திகதிய 03 ஆம் இலக்க உள்ளூராட்சி மறுசீராமைப்புச் சுற்றறிக்கையின் 8 ஆம் பந்தியில் தெரிவிக்கப்பட்ட தற்கமைய சபையில் உள்ளக கணக்காய்வு பிரிவு எற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

5. முறைமைகளும் மற்றும் கட்டுப்பாடுகளும்

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) வருமானச் சேகரிப்பு